செய்தி வெளியீட்டு எண்.01 நாள்: 2.1.2010

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை நகரத்தில் போலி குடும்ப அட்டைகளை களைவதற்காக நான்காவது கட்டமாக தி.நகர், பரங்கிமலை, சைதாப்பேட்டை , சோழிங்கநல்லூர், பெரம்பூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர் மற்றும் ஆவடி மண்டலங்களில் 100% குடும்ப அட்டை தணிக்கை பணி முடிக்கப்பட்டு முகவரி மாறிய மற்றும் வசிக்காத குடும்பங்களுக்குரிய குடும்ப அட்டைகளுக்கு 21.12.2009 முதல் பொருள் வழங்கல் நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்களை சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை இத்துறையின் இணையதளமான http://www.consumer.tn.gov.in/cardstatus -ல் அறிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அதன் விவரமும் ஏற்கனவே பத்திரிக்கைச் செய்தி வாயிலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் பொருள்கள் பெற்றுவரும் கடையிலேயே தொடர்ந்து பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த பட்டியலில் இடம்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டையின் நகல்(xerox copy) கடையில் கொடுக்கத்தேவையில்லை.

இது தவிர இந்த மண்டலங்களை சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் பிஎஸ்என்எல் செல்லிடை தொலைபேசி சேவை குறுஞ்செய்தி தகவல் மூலம் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை அறியும் வசதியும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மண்டலங்களை சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் CARD என பெரிய எழுத்தில் தட்டச்சு செய்து, ஒரு இடைவெளி விட்டு குடும்ப அட்டையின் **10 இலக்க எண்ணை** (அட்டையில் அரசு சின்னத்திற்கு அருகில் உள்ளது) இடைவிடாமல் (உதாரணம்: 12/G/0536496 என்ற அட்டையின் எண் 12G0536496 என்று பதிவு செய்யவேண்டும்) பதிவு செய்து அவர்களது குடும்ப அட்டையின் நிலையை அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, " **CARD 02G0536496** " என செல்பேசியில் தட்டச்சு செய்து, **54368** என்ற எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி விவரம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறான விவரம் தியாகராயநகர், பரங்கிமலை, சைதாப்பேட்டை , சோழிங்கநல்லூர், பெரம்பூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர் மற்றும் ஆவடி மண்டலங்களில் அட்டைதாரர்கள் மேற்கண்ட சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே குடும்ப அட்டைதாரர்கள் மேற்கண்ட வசதியை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்ட SMS சேவைக்கு பி.எஸ்.என்.எல். (BSNL) நிறுவனத்தின் கட்டணங்கள் விதிக்கப்படும்.

(ஒம்.) க. ரா$ாராமன்,
ஆணையாளர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்
செயலகம், சென்னை–9.